# பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

## ...நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்.

லேவி 19:2

செய்தி மலர்
2021
பெப்ரவரி

இதழ் : 10
மலர் : 17



# சபை ஊழியரின் அன்பு மடல்



கிறிஸ்துவிற்குள் அன்பான திருச்சபை குடும்பத்தாரே எல்லாம் வல்ல இறைவன் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் எல்லோரும் நலமாக இருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறேன். என்னுடைய ஆவலும் அனுதின ஜெபமும் அதுவே.

கடந்த ஜனவரி மாதம் முழுவதும் அற்புதமாய் நம்மை வழி நடத்தின தேவன் இந்த பிப்ரவரி மாதத்திலும் கிருபையாக வழி நடத்துவாராக.

இந்த மாதம் நாம் லெந்து நாட்களை அனுசரிக்க இருக்கிறோம். இந்த மாதத்திற்கு ஆண்டவர் நமக்கு தரும் வார்த்தை

"நான் பரிசுத்தர் ஆகவே நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்பதே" (லேவி-19:2)

ஆம் பிரியமானவர்களே, "பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்" (வெளி-22:11) என்று வெளிப்படுத்தின விசேஷத்திலே ஆண்டவர் உரைத்தபடி இந்த லெந்து நாட்களிலே நாம் மேலும் நம்மை பரிசுத்தப்படுத்திக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

நாம் நம்மை பரிசுத்தபடுத்திக்கொள்வதினால் என்னென்ன ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக்கொள்வோம் என்பதை கீழ்வரும் பகுதிகளிலே காணலாம்.

## 1. தேவனை தரிசிக்க.......

"யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள். பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிப்பதில்லையே." (எபி-12:14)

நாம் பரிசுத்தத்தை காத்துக்கொள்வதற்கு அனுதினமும் வேதம் வாசித்து ஜெபத்திலே உறுதியாய் தரித்திருக்க வேண்டியது மிகவும் அவசியம். தானியேல் இப்படி தன்னைக் காத்துக்கொண்டதினாலே அவன் வேண்டிக்கொள்ளத் துவங்கிய போதே அவனுடைய வேண்டுதல் கேட்கப்பட்டது. (தானி-10:12)அவன் ஒவ்வொரு நாளும் மூன்று வேளை தேவ சந்நிதியிலே காத்து ஜெபித்துக்கொண்டிருந்தான். ஆண்டவராகிய இயேசுவும் தன் பரிசுத்தத்தை காத்துக்கொள்வதற்காக வனாந்திரங்களுக்கு சென்று ஜெபித்தார்.

3 இரவெல்லாம் கண்விழித்து ஜெபித்தார். மலைகளுக்கு சென்று தனி ஜெபம் செய்தார். அதனால் முப்பது வயது நிரம்பிய வாலிபனாகிய இயேசு கிறிஸ்து பரிசுத்தமாய் ஊழியம் செய்ய முடிந்தது. "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனை தரிசிப்பார்கள்". (மத்-5:8)

என் அன்பு சகோதர, சகோதரிகளே நாமும் இந்த லெந்து நாட்களிலே அதிகமாக வேதம் வாசித்து ஜெபித்து அதிக நேரம் ஆண்டவரோடு செலவிடும்பொழுது தானியேலை ஆசீர்வதித்த கர்த்தர் நம்மையும் ஆசீர்வதிப்பார். நம்மையும் பரிசுத்தமாய் காத்துக்கொள்வார். இயேசுவைப் போலவே நாமும் வல்லமையாய் ஊழியம் செய்ய முடியும். பிசாசையும் அவன் கிரியைகளையும் எதிர்த்து அழித்து ஜெயிக்க முடியும். அல்லேலூயா.

## 2. ஊழியம் அங்கிகரிக்கப்பட .....

நாம் கர்த்தருக்குள் திடமனதாயிருந்து ஊழியங்களை செய்கின்றபொழுது நம்முடைய ஊழியங்களிலே வளர்ச்சியும், பெருக்கமும், ஆசீர்வாதங்களும் அதிக அளவில் காணப்படும்.

"கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு தன் காலத்தில் தன் கனியைத் தந்து இலையுதிராதிருக்கிற மரத்தை போலிருப்பான். அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்" (சங்கீ-1:2,3) யோசேப்பு தன்னை பரிசுத்தமாய் காத்துக்கொண்டு போத்திபாரின் மனைவியின் இச்சசைக்கு இணங்காமல் விலகி ஓடிப் போனதினால் தேவ ஆவியானவர் அவன் மேல் நிலைகொண்டிருந்தார். எகிப்து நாட்டு ராஜா பார்வோன் சொன்னான் தேவ ஆவியை பெற்ற இந்த மனுஷனைப் போல வேறொருவன் உண்டோ என்று. (ஆதி-41:38) தன்னுடைய ராஜ்ஜியத்திலே யோசேப்பை பெரியவனாக்கினான். யோசேப்பின் மூலம் தேவனுடைய நாமம் மகிமைப்பட்டது. அவன் தகப்பனாகிய யாக்கோபு சொன்னான். யோசேப்பு கனி தரும் செடி அவன் நீர் ஊற்றண்டையிலுள்ள கனி தரும் செடி. அதின் கொடிகள் சுவரின் மேல் படரும். (ஆதி-49:22)

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் தன் ஊழியத்தை ஆரம்பிப்பதற்கு முன்பு நாற்பது நாட்கள் கடுமையாய் உபவாசித்து, ஜெபித்து அதன் பிறகு ஞானஸ்நானம் எடுத்தார். அப்பொழுது வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி இவர் என்னுடைய நேச குமாரன். இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது. அது மாத்திரமல்ல தேவ ஆவி புறாவைப் போல இறங்கி அவர் மேல் பொழிந்தருளப்பட்டார். (மத்-3:16,17) அதன் பிறகு அவருடைய ஊழியம் மகிமையாய் ஆரம்பிக்கப்பட்டு பலுகி பெருகியது. அவருடைய கீர்த்தி சீரியா தேசம் எங்கும் பிரசித்தமாயிற்று அப்பொழுது பலவித வியாதிகளையும், வேதனைகளையும் அடைந்திருந்த சகலப் பிணியாளிகளையும், பிசாசு பிடித்தவர்களையும், சந்திர ரோகிகளையும், திமிர்வாதக்காரரையும் அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். அவர்களை சொஸ்தமாக்கினார். கலிலேயாவிலும், தெக்கப்போலியிலும், எருசலேமிலும், யூதேயாவிலும், யோர்தானுக்கு அப்புறத்திலும் இருந்து திரளான ஜனங்கள் வந்து அவருக்கு பின் சென்றார்கள். (மத்-4:24,25)

இயேசுவின் ஊழியத்தில் எத்தனை பெருக்கம், எத்தனை மகிமை, எத்தனை அற்புதம், எத்தனை விடுதலை, எத்தனை ஆசீர்வாதம், எத்தனை கிருபை, எத்தனை பரிசுத்தம் பாருங்கள். நாமும் இரவும் பகலும் கர்த்தருடைய வேதத்தில் தியானமாயிருந்து நல்ல ஜெப வாழ்க்கை வாழும்பொழுது நம்முடைய வீடு ஆசீர்வதிக்கப்படும், நம்முடைய சபை ஆசீர்வதிக்கப்படும், நம்முடைய ஊழியம் ஆசீர்வதிக்கப்படும், நம்முடைய வேலை ஆசீர்வதிக்கப்படும். நம்முடைய வருமானம் ஆசீர்வதிக்கப்படும். நாமும் பல ஆயிரங்களுக்கு ஆசீர்வாதமாய் வாழுவோம். இப்படிப்பட்ட கிருபைகளை ஆண்டவர் நமக்கு அருள்செய்வாராக.

## 3. நித்திய ஜீவனை சுதந்தரிக்க.....

"நீங்கள் தேவனுடைய ஆலயமாய் இருக்கிறீர்கள் என்றும் தேவனுடைய ஆவி உங்களில் வாசமாய் இருக்கிறார் என்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் அவனை தேவன் கெடுப்பார். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களே அந்த ஆலயம்." (1-கொரி-3:16,17) நாம் ஜெபித்து வேதம் வாசித்து பரிசுத்தத்திலே

நிலைகொண்டிருக்கும்பொழுது கர்த்தருடைய ஆவி நம்முடைய சரீரத்திலே வாசம் செய்து நம்மை பரிசுத்த ஆலயமாக்குகிறார். ஏன் நம்மை பரிசுத்த ஆலயமாய் மாற்றுகிறார் என்றால் இந்த உலகத்திலும் நாம் மகிமையான வாழ்க்கை வாழ்ந்து அதன் பிறகு நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக்கொள்ள வேண்டுமென்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. இந்த உலகத்தில் நாம் செய்கிற நற்கிரியைகள், தான தர்மங்கள், புண்ணியங்கள் எல்லாம் பரலோகத்தின் கணக்கிலே எழுதப்பட்டு பரலோக பொக்கிஷமாய் பாதுகாக்கப்படுகிறது. நாம் தேவனுக்கு உடன் வேலையாட்களுமாய் இருக்கிறோம்.

"அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளது என்று அக்கினியானது பரிசோதிக்கும் அதின் மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால் அவன் கூலியைப் பெறுவான் (கொரி-3:13) ஆகவே நம்முடைய பரிசுத்த வாழ்வு பரலோகத்தினால் கணிக்கப்படுகிறது. அந்தக் கணக்கின் அடிப்படையில்தான் நாம் நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொள்கிறோம். நாம் பரலோகத்திற்கு போகின்றபொழுது நம்முடைய ஆண்டவர் நம் பரிசுத்த வாழ்க்கையை பார்த்து நல்லது உத்தமும் உண்மையுமான ஊழியக்காரர்களே உங்கள் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசியுங்கள்.

மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச்செய்தீர்களோ? அதை எனக்கே செய்தீர்கள் என்று சொல்லி நித்திய ஜீவனை அவர்களுக்கு பரிசளிப்பார். (மத்-25:46)

கர்த்தர் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து இந்த லெந்து நாட்களிலே நம்மை ஆண்டவரிடம் கிட்டி சேரப்பண்ணி அவரை தரிசிக்கவும் ஊழியங்களை வல்லமையாய் நிறைவேற்றவும் நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொள்ள தகுதியானவர்களாக நம்மை உருமாற்றி பாதுகாத்துக்கொள்வாராக.

கர்த்தருடைய கிருபை உங்கள் அனைவரோடுங் கூட இருப்பதாக.

கிறிஸ்த்துவுக்குள்

அன்பு சகோதரன்

சபையின் ஊழியர் சகோ. ஸ்டாலின்

## வேத வசனம்

"தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள்" (எபே 6:17).

தேவ வசனமாகிய ஆவியின் பட்டயம்" எதிராளியை தாக்கி நொறுக்கும் கர்த்தரின் சம்மட்டி. தேவன் தம்முடைய கைகளிலே வைத்திருக்கும் மாபெரும் சர்வாயுத வர்க்கம்.

தேவ வசனங்களை செயல்முறைக்கு கொண்டு வாருங்கள் அவை ஆவியாயும் ஜீவனுமாயும் வல்லமையாயும் இருக்கிறது. அவைகளே அந்தகார வல்லமைகளை முறியடிக்கிறது.

அப். பவுல் எருசலேமுக்கு புறப்பட்டு போவதற்கு முன்பு தமக்கு அருமையானவர்களிடத்திலே விடை பெற்று சென்றார். அப்பொழுது தேவன் கொடுத்திருக்கிற ஆயுதத்தைக் குறித்து ஞாபகபடுத்த அவர் தவறவில்லை.

காரணம் என்னவென்றால் நான போன பின்பு மந்தையை தப்ப விடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும், உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களை தங்களிடத்தில் இழுத்துகொள்ளும்படி மாறுபாடானவைகளை போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன்(அப் 20:29,30)என்று தீர்க்கதரிசனத்தை உரைத்து அப்.பவுல் முடிவாக தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்பு கொடுக்கிறேன் என்று சொன்னார்(அப். 20:32)

தேனுடைய கிருபையுள்ள மாறாத வசனம் பாதுகாக்க கூடியது. உங்களை சூழ்ந்து கொள்ள கூடியது. எல்லா தீமைக்கும் விலக்கி காக்ககூடியது.

நாம் ஜீவ வசனத்தை பிடித்துக் கொண்டு உலகத்திலே சுடர்களை போல பிரகாசிக்கும்படி அழைக்கபட்டிருக்கிறோம்" (பிலி 3:14) தேவ வசனங்கள் இருளின் ஆதிக்கத்தை வெற்றி பெற நமக்கு உதவி செய்கிறது.

கர்த்தருடைய வசனம் ஆவியாயும் ஜீவனுமாயும் இருக்கிறது. மட்டுமல்ல வல்லமையான ஆயுதமாகவும் இருக்கிறது. கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் இனிமையானவை சூழ்நிலைக்கு ஏற்ப அவைகளை நாம் பயன்படுத்தும் போது அவை நமக்கு வெற்றியை கொண்டுவருகிறது.

பயமும் கலக்கமும் சோர்வும் உங்களுடைய உள்ளத்திலே போராடுகிறதா? நீதிமான் சிங்கத்தை போல தையிரியமாயிருக்கிறான் (நீதி 28:1)என்ற வசனத்தை பிடித்துக்கொண்டு ஆவிக்குறிய போராட்டத்திலே இறங்குங்கள். சோர்வின் ஆவி உங்களை மேற்கொள்ளாது.

இருளிலே நடக்கிறதை போல உணருகிறீர்களா? இயேசு கிறிஸ்து என்னைவிட்டு விலகுவதுமில்லை என்னை கைவிடுவதுமில்லை என்று

அறிக்கை செய்யுங்கள் (எபி 13:5,6)தனிமை உணர்வுகளை மேற்கொள்ள அது உதவியாயிருக்கும்.

உங்களுடைய உள்ளத்திலே பல வகையான கசப்புகள் குடியேறிவிட்டதா? அதற்கு எதிர்த்து போராட வேண்டுமா? ரோமர் 5:5ம் வசனத்தை பயன்படுத்துங்கள். பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால். அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது. அந்த அன்பினால்தான் எல்லா கசப்புகளையும் மேற்கொள்ளுவேன் என்று சொல்லி வெற்றி பெறுங்கள்.

பல சாபகட்டுகள் உங்கள் வாழ்க்கையை சூழ்ந்திருக்கிறதா? (கலா. 3:13) ல் சொல்லப்பட்ட வேத வசனத்தை எடுத்துகொள்ளுங்கள். கிறிஸ்து எனக்காக சாபமாகி நியாய பிரமாணத்தில் சாபத்திற்கு என்னை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார் என்று சொல்லி வெற்றி பெறுங்கள்.

பில்லி சூன்யங்களா? செய்வினைகளா? மந்திரவாதிகளின் போராட்டமா? எண் : 23:23) யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதமில்லை இஸ்ரவேலுக்கு விரோதமான குறி சொல்லுதலுமில்லை" என்று எழுதபட்டிருக்கிறது " உனக்கு விரோதமாக உருவாக்கபடும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போம், உனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நீ குற்றபடுத்துவாய்.(ஏசா 54:17)

பிசாசின் போராட்டங்களா? அசுத்த ஆவியின் கிரியைகளா? லூக்கா 10:19) ஒரு நல்ல ஆயுதமாகும். "இதோ" சர்ப்பங்களையும் தேள்களையும், மிதிக்கவும் சத்துருவினுடைய சர்வ வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரம் கொடுக்கிறேன். ஒன்றும் உங்களை சேதபடுத்தமாட்டாது" இயேசுவின் நாமத்தில் பிசாசுகளை துரத்துவேன் என்று விசுவாச அறிக்கை செய்யுங்கள்.(மாற் 16:17)

வேதத்தில் ஏராளமான வாக்குதத்ததங்கள் முத்துக்களை போல, வைரங்களை போல ஒளிவீசிக்கொண்டிருக்கின்றன. அவைகளை கண்டு பிசாசு பயப்படுகிறான் வேத வசனத்திற்கு முன்பாக நடுங்குகிறான். கர்த்தர் சாத்தானை ஜெயிக்கும்போது எழுதியிருக்கிறதே என்று சொல்லி எழுதப்பட்ட தேவனுடைய வசனங்களினால் அவனை முறியடித்தார்.

ஆதியிலே என்ன இருந்தது தெரியுமா? வார்த்தைதான் இருந்தது. அந்த வார்த்தையினால் கர்த்தர் ஆதியிலே வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் ( ஆதி 1:1)"ஆதியிலே வார்த்தை இருந்தது இந்த வார்த்தை தேவனிடத்திருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது" (யோவான் 1:1)வானமும் பூமியும் ஒழிந்து போனாலும் கர்த்தருடைய வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை(மாற்கு 24:35)

வேதம் சொல்லுகிறது " உமது சகல பிரஸ்தாபத்தைபார்கிலும் உமது வார்த்தையை நீர் மகிமைபடுததியிருக்கிறீர்" (சங் 138:2) தேவனுடைய பிள்ளைகளே அந்த வார்த்தையை பிடித்த கொள்ளுங்கள்.

உங்களுக்கு என்ன தேவையோ அதற்கேற்ற வாக்குத்தத்தங்ககளை பற்றி கொண்டு உறுதியாய் கேளுங்கள்.

வாக்கு பண்ணினவர் உண்மையுள்ளவர் , அவர் சொன்னதை விட்டு ஒரு நாளும் விலகமாட்டார். ரோமர் 4:21, எபி–11:11ல் வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர் என்று வேதம் சொல்லுகிறது.

இந்த இணையற்ற ஆயுதத்தை நீங்கள் பயன்படுத்த வேண்டுமென்றால் வேதத்தை நேசித்து வாசிக்க வேண்டும். தியானித்து வாசிக்கவேண்டும்.

இந்த வேதவசனமானது எந்த பட்டயத்திலும் கூர்மையான பட்டயம் என்று எபி 4:12 –லே வாசிக்கிறோம். எபி 6:17லே இது ஆவியின் பட்டயம் என்று அழைக்கபடுகிறது. இந்த பட்டயத்தை எப்போதும் உங்கள் கைகளிலே வைப்பீர்கள் என்றால் உங்கள் இருதயம் கலங்குவதில்லை, சிங்கத்தை போல் தைரியமுள்ளவர்களாக இருப்பீர்கள், வேதவசனத்தை விசுவாசிக்க விசுவாசிக்க உங்களுடைய உள்ளான மனுஷனிலே தேவனுடைய பலம் இறங்கி வரும்.

"தேவ வசனமாகிய ஆவியின் பட்டத்தை எடுத்து கொள்ளுங்கள்" என்று அப்– பவுல் எச்சரிப்பான ஆலோசனையை தருகிறார் (எபே 6:17) தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையுள்ளதாயும், இருபுறமம் கருகுள்ள எந்த பட்டயத்திலும் கருக்கானதாயும் ஆத்துமாவையும், ஆவியையும், கணுக்களையும், ஊனையும், பிரிக்கதக்கதாக உருவகுத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் , யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.(எபி 4:12)

யுத்தத்தில் தற்காப்புக்கென்று உபயோகிக்கும் படைகலமும் உண்டு எதிராளியை தாக்கி வீழ்த்தும் போராயுதமும் உண்டு. வேதவசனமோ, நம்மை பாதுகாக்கும் கேடகமாகவும், அதே நேரத்தில் சத்துருவை வீழ்த்தும் ஆவியின் பட்டயமாகவும் இருவிதத்திலும் நமக்க பயன்படுகிறது.

வேத வசனங்களை வாசித்து மனப்பாடம் செய்வது மட்டுமல்ல, அனுதின சத்துருவின் போராட்டத்தில், சோதனை நேரத்தில், ஆபத்து வேளைகளில் அவை உள் போராயுதமாயிருக்கும்படி அப்பியாசபடுத்து.

என் வார்த்தை அக்கினியை போலும். கன்மலையை நொறுக்கும் சம்மட்டியை போலும் இருக்கிறதல்லவோ ! (எரேமியா 23:21)

ஆமென்

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக

என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை. (யோவேல் 2:26)

## 2021 ஜனவரி மாத வேத வினாவுக்கு விடை

1. அந்தப்படி, இளைஞரே, .......பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். ( 1 பேதுரு 5:5)
2. கர்த்தர் ( யூதா 1:15)
3. (யோவான் 15: 17 , 21)
4. ( 1 பேதுரு 1:17)
5. (1 யோவான் 7 : 8)
6. ( 1 பேதுரு 3: 9 )
7. (3 யோவான் 12)
8. ((1 யோவான் 3: 14))
9. (3 யோவான் 11)
10. (1 யோவான் 4:20)
11. ( 1 பேதுரு 2: 9 )
12. (2 யோவான் 6)
13. ( 1 பேதுரு 2: 8 )
14. ( 1 பேதுரு 1: 9 )
15. (1 யோவான் 2:9)

### 2021 ஜனவரி மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சுகந்தி தம்பு குமார்
Sis. லதா கிருஸ்டோபர்
Sis. அனுஷா டினோ
Sis. எழிலரசி டேனியல்

........உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்பேன்..

*ஆதியாகமம் 12:7*

10 " ..உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன்;" :
... (ஆதி – 16:10)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வி. ஜியோஃபி ஷம்மா ஏசுரெத்தினம்
சகோதரி. ராணி ராமமூர்த்தி
சகோ.எபினேசர் V
செல்வி. ஷாரோன் கிரேஸ் எபிநேசர்
செல்வன். பிரவீன் ஐசக்துரை
சகோ. வேனு ராமர்
சகோதரி. கீதா சகாய மேரி
சகோதரி. நீலாவதி ஆசீர்வாதம்
சகோ. இம்மானுவேல் ஸ்டீபன்
சகோ.கிரண் குமார்
சகோ. டேனியல் குமார்
சகோதரி. மெர்லின் ஜோன்ஸ்

சகோ. ஜெயசேகர்
சகோதரி. ஜாய் ஷெகினா ஜான்போஸ்கோ
சகோ.ஜெயபிரகாஷ்
சகோ.நவீன் குமார்
செல்வி. ஹெப்சிபா பியூலா தாமஸ்
சகோ. ஜான்சன்
சகோதரி. பிரிஸ்சில்லா ஆமோஸ்
செல்வன். அருன் பிரகாஷ்
செல்வி. கிறிஸ்து ராணி ஆசீர்வாதம்

உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும (ஆதி .22:18)

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

திருமதி & திரு. ராபின் ராஜ்
திருமதி & திரு. ஜெகன்
திருமதி & திரு. ஜோசப் ஜாண்
திருமதி & திரு. அந்தோனி சாமி
திருமதி & திரு. ஞான சேகர்
திருமதி & திரு. ராஜவேல்

II

# 2021 பெப்ரவரி மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 07/02/2021 | சகோ. எபினேசர் | சகோ. ஜசக்துரை |
| 14/02/2021 | சகோ. பிராங்ளின் | சகோ. கிறிஸ்டோபர் தேவராஜ் |
| 21/02/2021 | சகோ. பிரசாத் | சகோ.சுகுமார் |
| 28/02/2021 | சகோ. ஆரோக்கியராஜ் | சகோ. பிரசாத் |

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 3:30 முதல் 5:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 05/02/2021 | சகோ.ரவிஜான் பீட்டர் | சகோ.ஆரோக்கியதாஸ் |
| 12/02/2021 | சகோ. எபினேசர் | சகோ. ஸ்டாலின் |
| 19/02/2021 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 26/02/2021 | சகோ.சுகுமார் | சகோ. ஜெகநாதன் |

17/02/2021 அன்று மாலை சாம்பல் புதன் ஆராதனை
இடம் பாஹீலில் உள்ள சபையின் ஜெப வீடு
நேரம் மாலை 6:30 முதல் இரவு 8:00 மணிவரை

11/02/2021 அன்று முழு இரவு ஜெபம்
இடம் – பாஹீலில் உள்ள சபையின் ஜெப வீடு
நேரம் – இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணிவரை

# 2021 பெப்ரவரி மாதத்திற்கான வேத வினா!

கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்

1. அவர் (இயேசு) பாடுபட்ட பின்பு எத்தனை நாளளவும் அப்போஸ்தலர்களுக்குத் தரிசனமானார்?
2. பவுல் தனக்காக வாடகைக்கு வாங்கியிருந்த வீட்டிலே எத்தனை வருடங்கள் தங்கி இருந்தார்?
3. யார் பவுலினிடத்தில் வந்து நீ ரோமனா என்று கேட்டது?
4. யார் பவுலை கல்லெறிந்து அவன் மரித்துப்போனான் என்று எண்ணினார்கள்?
5. தீர்க்கதரிசிகளாயும், போதகர்களாயும் இருந்தது யார் யார்?
6. சாட்சிக்காரர் தங்கள் வஸ்திரங்களைக் கழற்றி யாருடைய பாதத்தின் அருகே வைத்தார்கள்?
7. நாங்கள் கண்டவைகளையும், கேட்டவைகளையும் பேசாமலிருக்கக் கூடாது என்று
யார் சொன்னது?
8. கர்த்தருடைய ஆவியானவரால் பிலிப்பு காணப்படாமல் போய் பின்பு எங்கே காணப்பட்டார்?
9. சீஷர்கள் பவுலை எதில் வைத்து மதில் வழியாக இறக்கி விட்டார்கள்?
10. முதல் முதல் சீஷர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்கின்ற பேர் எங்கே வழங்கப்பட்டது?
11. பர்னபாவும், சவுலும் எந்த ஊழியத்தை நிறைவேற்றினார்கள்?
12. யுஸ்துவின் வீட்டில் பவுல் எவ்வளவு நாட்கள் தங்கியிருந்து தேவ வசனத்தை உபதேசம் பண்ணிக் கொண்டு வந்தான்?
13. எந்த பட்டணம் விக்கிரகங்களால் நிறைந்திருந்தது?
14. பவுல் படிகளின் மேல் ஏறி நின்று எந்த பாஷையிலே அவர்களோடு பேசத் தொடங்கினான்?
15. அலெக்சந்திரியா பட்டணத்து கப்பலின் பெயர் என்ன?

விடைகளை வருகின்ற 20-02-2021 க்குள் (whatsApps #66015503-with Name)அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். விடைகளை **அப்போஸ்தலர்கள்** நடபடிகளில் புத்தகத்தில் இருந்து கண்டுபிடிக்கவும்

– – –தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; –மத்தேயு 7:7

## பாஸ்டர் மாற்கு டேனியல் பன்டேன் (1923–1989)

டேனியல் மாற்கு பன்டேன் கனடாவில் வின்னிப்பெக் என்ற இடத்தில் 1923 ஆம் ஆண்டு ஜனவரி 26–ம் தேதி பிறந்தார். அவர் தகப்பனார் ஒரு பிரசங்கியார். பிரசங்கிப்பதை கேட்டு மகிழ்ந்த மாற்கு, தானும் ஒரு பிரசங்கியாராக வேண்டுமென்று விருப்பங்கொண்டார். தன்னுடைய தாயின் தெய்வ பக்தி அவரை அதிகம் கவர்ந்தது. ஏழு வயது இளைஞனாக இருக்கும்போதே மாற்கு தன்னை தேவனுக்கென்று அர்ப்பணித்தார். ஊழியம் செய்த மிஷனெரிகளின் வரலாற்றைக் கேட்டபோதெல்லாம் அகமகிழ்ந்தார். ஆப்பிரிக்கா, லைபீரியா போன்ற நாடுகளுக்குச் சென்று ஊழியம் செய்த கென்ஸ்டிவன்சனின் வாழ்க்கை சரிதை, அவரின் ஏழாம் வயதிலேயே அவரை அதிகம் கவர்ந்தது.

மாற்கு தனது 16–வது வயதில் டொரோன்டோவிலுள்ள கடை ஒன்றில் வேலையில் சேர்ந்தார். அங்கு சேர்ந்த சில வாரங்களில் பணம் வசூலிக்கும் இடத்தில் பணியமர்த்தப்பட்டார். நாணயமான கடின உழைப்பைக் கண்ட அவருடைய மேலாளரின் பாராட்டுதலைப் பெற்றார். ஒருநாள் இரவு படுக்கைக்கு செல்லும் சமயம் ஆண்டவர் தன்னோடு பேசுவதை தெளிவாக அவர் உணர்ந்தார். உடனே முழங்காலில் நின்று ஆண்டவரே இந்த உலகக் காரியங்களை இச்சிக்கும் தன்மையை என்னிலிருந்து எடுத்துப் போடும். நான் உமக்கு ஊழியம் செய்ய வாக்களிக்கிறேன் என்று கூறினார். இதைத் தொடர்ந்து தன்னுடைய வேலையை ராஜினாமா செய்துவிட்டு கடவுளுடைய வேலையை செய்யலானார். அவர் பொறுப்பேற்ற திருச்சபை வாட்ரோஸ் என்ற இடத்தில் அமைந்திருந்தது.

மாற்கு அத்திருச்சபைப் பொறுப்பேற்ற சமயம் அதின் அங்கத்தினர்கள் ஆறு பேர் மட்டுமே என்ற போதிலும், அந்த ஊழியத்தில் தன்னுடைய வாழ்க்கையையே மாற்றம் காணச் செய்தது. 21வது வயதில் சுவிசேஷகராகச் செல்வதற்கான அழைப்பை அவர் பெற்றார். 1944–ஆம் வருடம் 2 அன்று ஒரு மிஷனெரியின் மகளாகிய ஹல்டாவை திருமணம் செய்து கொண்டார். 1952–ம் ஆண்டு வெளிநாட்டுக்குச் சென்று ஊழியம் செய்யவேண்டும் என்ற தன் விருப்பத்தை தன் மனைவியிடம் தெரிவித்தார். மூன்று மாதங்களே ஆயின. அதற்குள் தேவனிடதிலிருந்து புதிய அழைப்பு வந்தது. இது பற்றி மாற்கு கூறுகிறார். "இந்த உள் அழைப்பை நான் வேறு யாரிடமும் கூறவில்லை ஆனாலும் மிஷனெரி தலைமையகத்திலிருந்து உடனே கொல்கத்தாவுக்கு போகும்படி பணிக்கப்பட்டோம்." மாற்குவும், மனைவியும், மனைவியின் தாயாருமாக ஆகஸ்ட் 1954–ம் ஆண்டு இந்தியா வந்து சேர்ந்தனர். ஆரம்ப நாளிலிருந்து பலவித கஷ்டங்கள், சோதனைகள், பண நெருக்கடிகள், தனிமை, என்று ஏகப்பட்ட நெருக்கங்கள் இத்தனை இடர்பாடுகளும், தொல்லைகளும் அவர்களின் ஊழிய

மகிமையின் மத்தியில் ஒன்றுமில்லாமல் போய்விட்டன. தங்களின் ஊழியம் அநேக ஏழை மக்களையும், சுகவீனரையும், பசியுற்றோரையும் தொட்டு, அவர்களின் வாழ்க்கையைப் பிரகாசமடைய செய்கிறது என்ற உண்மை அவர்களை மெய்சிலிர்க்க செய்தது.

1964–ம் ஆண்டு மாற்குவின் குடும்பத்தினர் 230 மாணவர்களுடன் அசெம்பிளீஸ் ஆப் காட் பள்ளிக் கூடத்தை கல்கத்தாவில் நிறுவினர். இந்த பள்ளிக்கூடம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக வளர்ந்தது. இன்று பாலர் வகுப்பு முதல் இளைநிலை கல்லூரி வரையில் ஆலமரம் போல் பொலிவுடன் விளங்குகிறது. இப்படி சிறிய அளவில் ஆரம்பித்து தற்போது 10000 மாணவர்கள் கல்வி கற்கும் 20 பள்ளிகளாக மிஷன் ஆப் மெர்ஸி வளர்ந்திருக்கிறது.

1984–ம் ஆண்டு மேற்கு வங்காளத்தில் 15 மில்லியன் மக்கள் பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொழுது ஐக்கிய நாட்டுச் சபையுடன் சேர்ந்து தங்கள் வீடுகளை இழந்து தவித்த மக்களுக்கு மாற்குவும் அவரது குழுவினரும் உதவி செய்தனர். ஆதரவற்ற சிறுவர்களுக்கும், வறுமையின் நிமித்தம், பள்ளிக்கூட படிப்பை கைவிட்ட சிறார்களுக்கும் உதவும் படியாக சிறுவர் இல்லம் ஒன்றை மாற்கு பண்டேன் தொடங்கினார். 1965–ம் ஆண்டு மாணவர்களுகளுக்கு உணவு அளிக்கும் திட்டத்தையும் ஆரம்பித்தார். ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு இத்திட்டம் பயன் அளித்தது.

மருத்துவ ஊழியம் ஆரம்பிக்க வேண்டும் என்ற பண்டேன் தம்பதியினரின் கனவு 1977–ல் கைகூடியது. அரசாங்கத்திடமிருந்து இதற்கென்று ஒரு நிலம் ஆச்சரியமாக இவர்களுக்கு வழங்கப்பட்டது. அதுவரையில் 16 படுக்கைகள் கொண்ட சிறிய மருத்துவமனையை ராய்டு நடத்தி வந்தார். தேவனுக்கென்று பல்வேறு ஊழியங்களை 34 ஆண்டுகள் சிறப்பாக நிறைவேற்றிய பண்டேன் ஜீன் மாதம் 1989 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அவருடைய கல்லறையில் பர்மா புகழ் ஜட்சன் எழுதிய ஜெபம் பதிக்கப்பட்டிருக்கிறது. அது பின்வருமாறு ஒரே ஒரு வேண்டுதல் ஒரே ஒரு வாஞ்சை, என் கடமையை முடித்து இந்திய மண்ணிலுள்ள கல்லறையில் துயில்வது. பண்டேன் மரித்துவிட்டார் ஆனால் அவருடைய ஊழியம் தொடர்கிறது. மாற்கு மரித்தாலும் ஆயிரமாயிரம் பேர் பயன் பெறும் விதமாய் அவர் பணி இன்றும் தொடர்கிறது. நீங்கள் இப்படிப்பட்ட பணிக்குத் தயாரா?

கிறிஸ்துவுக்குள் அன்பு
சகோதரர்
சுகுமார்

என் கடிந்து கொள்ளுதலுக்கு திரும்புங்கள் இதோ என் ஆவியை உங்களுக்கு அருளுவேன் (நீதி-1:23)

கிறிஸ்துவுக்குள் அன்பான வாலிப சகோதர சகோதரிகளே, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

வாழ்க்கையின் முக்கியமான பகுதி இந்த வாலிப வயது. இந்த வாலிப வயதில் தான் பிசாசு நம்மை கிறிஸ்துவின் அன்பை விட்டு பிரிப்பதறக்கு பல காரியங்களை செய்கிறான். ஏனென்றால் இது விவரம் தெரியும் வயது இந்த வயதில் கிறிஸ்துவின் அன்பை தங்கள் ருசித்து விடாமல் தேவனோடு நெருங்கி வாழ்ந்து விடுவார்கள் என உங்கள் வாழ்க்கையை திசை திருப்பும் வலையில் இச்சை, உலகப்பிரகாரமான ஆடம்பரமான பொழுதுபோக்கு என பல்வேறு காரியங்களை உங்கள் மனதில் விதைத்து உங்களை திசை திருப்புவான்.

ஆனால் நம்முடைய தேவன் நம்முடைய தகப்பன் நாம் தவறான வழியில் நடக்கும் போது உலகப்பிரகாரமான தகப்பன் தன் மகன்,மகள் தவறு செய்யும் போது எப்படி கடிந்து கொள்கிறாரோ அதே போல்தான் நம் பரம தகப்பனும் கடிந்து கொள்கிறார்.

நீதி-1:24-ல் வேதம் சொல்கிறது,
"நான் கூப்பிட்டும் நீங்கள் கேட்க மாட்டோம் என்கிறீர்கள் நான் என் கையை நீட்டியும் கவனிக்கிறவன் ஒருவனும் இல்லை" என்பதாக வேதம் சொல்கிறது.

வாலிப சகோதர சகோதரிகளே தேவன் உன்னோடு பேசுகிறார். நீ செய்யும் சகல அசுத்தமான கரியங்களும் அந்தரங்கத்தில் நீ செய்யும் சகல பாவங்களும் அவருக்குத் தெரியும். அவருக்கு முன் சகலமும் நிர்வாணமும் வெளியரங்கமுமாயிருக்கிறது.

## 1. கடிந்து கொள்ளுதலுக்கு திரும்பு

தேவன் உன்னை எச்சரித்துக்கொண்டேயிருக்கிறார். வேலையில் உயர்வு இல்லை கையின் பிரயாசம் ஆசீர்வதிக்கப்படாமல் இருப்பது. நோய், தேவையில்லாத நண்பர்களுடன் இருந்து உன்னை பிரிப்பது போன்ற பலவிதமான சிட்சைகளை நன்மைக்கு ஏதுவாக கொடுத்து உன் மனந்திரும்புதலுக்கு காத்திருக்கிறார்.

நீதி-1:25-ல் சொல்கிறது,
"என் ஆலோசனையையெல்லாம் நீங்கள் தள்ளி என் கடிந்து கொள்ளதலை வெறுத்தீர்கள்"
கர்த்தர் கொடுத்த ஆலோசனையைப் பின்பற்றி உன் மறைமுகமான பாவங்களிலிருந்து வெளியே வாருங்கள். கர்த்தர் உனக்கு நல்ல எதிர்காலத்தை வைத்திருக்கிறார்.

இதோ திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன் ஒருவனும் அதை பூட்டமாட்டான் என கிறிஸ்து நமக்கு வாக்கு அருளியிருக்கிறார்.

## 2. சிட்சையே கிறிஸ்துவின் பெலன்..

சிம்சோனை குறித்து பார்த்தோமானால் தேவன் அவனுக்கு கொடுத்த அழைப்பை மறுத்து இச்சைக்கு இடம் கொடுத்து கண்களின் இச்சையில் விழுந்து தன் தரிசனத்தை இழந்து போனான். ஆனாலும் அவன் நேசித்த பெண்ணிடம் இருந்து அவனை பிரித்தெடுத்தார். அந்த பெண் வேறு திருமணம் செய்து கொண்டு போனாள். ஆனால் சிம்சோனுக்கு தேவன் கொடுத்த அதே பலத்தை அவர் எடுத்து போடவில்லை. காரணம் என் மகன் சிம்சோன் என்னிடத்தில் திரும்புவான் என்று காத்திருந்தார்.

ஆனால் சிம்சோனோ மறுபடியும் ஒரு வேசியினிடத்தில் போனான் என்று வேதம் சொல்கிறது. அதனால் அவன் கிருபையை பெலத்தை இழந்து முடிவில் தன் கண்களையே இழந்து போனான் என்று வாசிக்க முடிகிறது.

சகோதர சகோதரிகளே தேவன் உங்களுக்கு கொடுத்த கிருபையின் நாட்களை சரியாக உபயோகபடுத்திக்கொள்ளுங்கள். அவர் கடிந்து கொள்ளுதலுக்கு நீங்கள் திரும்பவில்லையென்றால்,

நீதி-1:26-ல் சொல்கிறது.

"நானும் உங்கள் ஆபத்துக்காலத்தில் நகைத்து நீங்கள் பயப்படுங்காரியம் வரும்போது ஆகடியம் பண்ணுவேன்" என்று கர்த்தர் சொல்கிறார். கிருபையின் நாட்களை வீணாக்காமல் தேவனிடத்தில் திரும்புங்கள். அவர் ஆவியை உங்களுக்குத் தருவார்.

நீதி-1:27-ல் சொல்கிறார்,

"என் கடிந்து கொள்ளுதலுக்கு நீங்கள் மனம் சாயாமல் போனால் உங்கள் வாழ்க்கையில் "நீங்கள் பயப்படும் காரியம் புசல் போல் வரும்போதும் ஆபத்து சூறாவளியைப் போல் உங்களுக்கு நேரிடும் போதும், நெருக்கமும், இடுக்கணும் உங்கள் மேல் வரும் போதும் ஆகடியம் பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்கிறார்.

"அப்பொழுது அவர்கள் என்னை நோக்கி கூப்பிடுவார்கள் நான் மறு உத்தரவு கொடுக்க மாட்டேன், அவர்கள் அதிகாலையிலே என்னைத் தேடுவார்கள் என்னைக் காணமாட்டார்கள்" என்று சொல்கிறார்.

அன்பான சகோதர சகோதரிகளே உங்கள் வாழ்க்கையிலே தேவனுடைய சிட்சையை புரிந்து கொண்டு அதை அசட்டை பண்ணாமல் அவரிடத்தில் திரும்புங்கள். கர்த்தர் பெரிய காரியங்களை செய்வார். அதே அதிகாரத்தில் நீதி-1:33-ல் சொல்கிறது,

"எனக்கு செவிகொடுக்கிறவன் எவனோ? அவன் விக்கினமின்றி வாசம் பண்ணி ஆபத்திற்குப் பயப்படாமல் அமைதியாயிருப்பான்" என்று சொல்லப்படுகிறது.

தேவனுடைய சிட்சையை அறிந்து கொண்டு கர்த்தர் கரத்திலிருந்து ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ளுங்கள்.

கர்த்தருடைய கிருபை நம் அனைவரோடுங்கூட இருப்பதாக,ஆமென்.

வாலிபம் இயேசுவுக்கே.

## சகோதரிகள் பகுதி

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளுக்கு ஸ்தோத்தரிக்கப்பட்ட தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துதலையும், சபையின் செய்திமலர் மூலமாக சந்திப்பதில் பெருமகிழ்ச்சியும் அடைகிறேன்.

இந்த ஆண்டின் முதலாம் மாதத்தை கடந்து செல்ல செய்த தேவனுக்கு கோடான கோடி நன்றி பலிகளை செலுத்தி இரண்டாம் மாதத்திற்குள் பிரவேசிக்க செய்த தேவனுக்கு ஸ்தோத்திரத்தை ஏறெடுக்கலாம்.

"புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள், புத்தியில்லாத ஸ்திரீயோ தன் கைகளினால் அதை இடித்துப் போடுகிறாள். (நீதி:14:1)

வீடு என்பது குடும்பத்தைக் குறிக்கிறது. ஏதேன் தோட்டத்தில், தேவன் முதலாவது குடும்பத்தை உண்டாக்கினார். ஆனால் சில நாட்களுக்குள்ளே அந்த குடும்பத்தில் பிரச்சனை வந்து விட்டது, ஏவாள் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படியாததால், அங்கே குழப்பம் வந்து விட்டது.

குடும்பம் இடிந்து போனது. ஏதேன் தோட்டத்தை விட்டு துரத்தப்பட்டார்கள். காரணம் சாத்தானின் தந்திர வலையில் வீழ்ந்ததால் தேவ சத்தத்துக்கு கீழ்படியாமல் போனதால். (சங்கீ-111:10) சொல்கிறது அவருடைய கற்பனைகளின்படி செய்கிற யாவருக்கும் நற்புத்தியுண்டு. எனவேதான் இயேசு சொன்னார் நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு இவைகளின்படி செய்கிறவன் எவனோ அவனைக் கன்மலையில் மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். (மத்-7:26.)

குடும்பத்தைக்கட்டுகிறவர் கர்த்தர் இதில் எந்த சந்தேகமும் கிடையாது. எனவேதான் (சங்-127:1) சொல்கிறது கர்த்தர் வீட்டைக் கட்டாராகில் அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா. ஒரு இஞ்ஜீனியர் கட்டடத்தை கட்டுவதற்கு எப்படி திட்டமிடுகிறாரோ அது போல தேவனும் ஒரு குடும்பத்தைக் கட்டுவதற்கு திட்டமிடுகிறார். ஆனால் அந்த திட்டத்தை நிறைவேற்ற குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் சில பொறுப்புகளை கொடுக்கிறார். அதில் குடும்பத்தலைவிக்கு ஒரு பெரும்பங்கை கொடுக்கிறார். எனவேதான் வேதம் சொல்கிறது "புத்தியுள்ள ஒரு ஸ்தீரி தன் வீட்டைக் கட்டுகிறாள்" என்று.

கட்டடத்தை கட்டுவதற்கு இஞ்ஜீனியர் ஒரு வரைபடம் தயாரிப்பார். அந்தக் கட்டடத்தில் எத்தனை தளங்கள் உண்டு, எத்தனை அறைகள் உண்டு. ஒவ்வொன்றும் எவ்வளவு நீளம், அகலம், உயரம் இருக்கவேண்டும் என்ற திட்டமும் தெளிவாக குறிக்கப்பட்டிருக்கும். அந்தக் கட்டடத்தை கட்டுவதில் ஈடுபாடு கொண்டுள்ள தொழிலாளிகள் கொடுக்கப்பட்ட குறிப்புகளின்படி துல்லியமாக அதைக் கட்டவேண்டும்.

ஒரு இல்லத்தரசி தன் குடும்பத்தைக் கட்டுவதற்கான ஆலோசனைகளை திட்டங்களை தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். பெற்றுக்கொள்வது மாத்திரமல்ல அதன்படி குடும்பத்தைக் கட்ட வேண்டும். ஒரு வீட்டைக் கட்டுவது என்பது அவ்வளவு எளிதான செயல்ல. எனவே தான் வீட்டைக் கட்டிப்பார், கல்யாணம் பன்னிப் பார் என்று சொல்வார்கள். வீடு கட்டுவது என்பது சவால்கள் நிறைந்த பணி அது போல குடும்பத்தைக் கட்டுவதிலும் பல இடற்பாடுகள் வரும்.

தேவனுடைய ஒத்தாசை இல்லாமல் குடும்பத்தைக் கட்டுவது இயலாத காரியம். ஆகவேதான் வசனம் சொல்கிறது கர்த்தர் வீட்டைக் கட்டாராகில் அதைக் கட்டுகிறவர்கள் பிரயாசம் விருதா (சங்கீ–127:1) குடும்பத்தலைவி கர்த்தருக்கு பயந்து தேவனுடைய சமூகத்தில் ஒவ்வொரு நாளும் காத்திருந்து, ஜெபித்து, ஆலோசனைகளைப் பெற்று தன் குடும்பத்தைக் கட்ட வேண்டும். 1–பேது–4:7 சொல்கிறது தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம் பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள். ஜெபம் இல்லாத வீடு கூரையில்லாத வீடு என்பார்கள். ஒரு வீட்டிற்கு கூரை எவ்வளவு அவசியமோ அது போல ஒரு குடும்பம் கட்டப்படுவதற்கு ஜெபம் மிகவும் அத்யாவசியமாயிருக்கிறது.

மத்–25–ல் புத்தியுள்ள கன்னிகைகளைப் பார்க்கிறோம். தேவையான எண்ணையோடு ஆயத்தமாயிருந்தார்கள். குடும்பத்தலைவி நித்திய வாழ்க்கையை பெற்றுக்கொள்வதற்கு தன் குடும்பத்தை ஆயத்தப்படுத்த வேண்டும். நீதி–31:10 குணசாலியான ஸ்திரீயைக் கண்டுபிடிப்பவன் யார்? அவளுடைய விலை முத்துக்களை பார்க்கிலும் உயர்ந்தது.

கர்த்தர் தங்களுடன் இருந்து தங்களையும் தங்கள் குடும்பத்தையும் பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பாராக ஆமென்!

கிறிஸ்துவுக்குள்
அன்பு சகோதரி
லதா கிருஸ்டோபர்

நீங்கள்
மனந்திரும்பி
அமர்ந்திருந்தால்
இரட்சிக்கப்படுவீர்கள்;
அமரிக்கையும்
நம்பிக்கையுமே
உங்கள் பெலனாயிருக்கும்
என்று இஸ்ரவேலின்
பரிசுத்தராயிருக்கிற
கர்த்தராகிய தேவன்
சொல்லுகிறார்;

ஏசாயா 30:15

## உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்


செயற்குழு உறுப்பினர்கள்

சபை ஊழியர் – சகோ. ஸ்டாலின்

66021072

செயலாளர் – சகோ. ஆரோக்கியதாஸ்

99870126

பொருளாளர்– சகோ. எபநேசர்

23922058 - 50203472

பெண்கள் ஐக்கிய தலைவி

சகோதரி . பியூலா ஜெகநாதன்

95542834

வாலிப ஐக்கிய தலைவர் –

சகோ. ஆரோக்கியராஜ்

66159784

Church Website Address - ahmaditamilcongregation.org

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait


தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.


Private Circulation only